**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

C 8102190

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 10/2023 | Date: நாள் 08.11.2023

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள்: u/s 7
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 07.11.2023 | Date to : நாள் வரை 07.11.2023
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.30 hrs | Time to : நேரம் வரை 22.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.11.2023 | Time நேரம் : 03.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — நல்வாழ்வுத்துறை, கல்வி மற்றும் இதர அலுவலகங்கள் கொண்ட கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர் சுமார் 300 மீட்டர் தென்கிழக்கு.
   Beat Number முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.S.மகேஷ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ஸ்ரீநிவாசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1975 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் தனிவட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் | (g) Address : முகவரி மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.இராமன் 41/2023, த/பெ தனபால், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். 2.திரு.திருசெல்வராஜா 52/2023, த/பெ பழனியாண்டி, தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, பட்டம்புதூர், (பொ)நேர்முக உதவியாளர்(உயர்நிலைப்பள்ளி), மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். 3.திரு.சாணக்கியன் 43/2023, த/பெ முனியாண்டி, இளநிலை உதவியாளர், அ-பிரிவு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-இல்லை-

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர்) இன்று 08.11.2023 அதிகாலை 03.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மகேஷ் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள்.07.11.2023, எதிரிகளின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.13,000/- ஆகியவற்றையும் சேர்த்து (1) திரு.இராமன் 41/2023, த/பெ தனபால், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். (2) திரு.திருசெல்வராஜா 52/2023, த/பெ பழனியாண்டி, தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, பட்டம்புதூர், (பொறுப்பு) நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி), மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். (3) திரு.சாணக்கியன் 43/2023, த/பெ முனியாண்டி, இளநிலை உதவியாளர், அ-பிரிவு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். ஆகியோர்கள்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் S.மகேஷ் (48/2023), த/பெ.ஸ்ரீநிவாசன், விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். தனி வட்டாட்சியர், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1,

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 8/11/23
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R.BOOMINATHAN
Rank: நிலை INSP. OF POLICE.

<u>விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.10/2023 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018</u>

<u>முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - நன்கொடை என்கிற பெயரில் வசூல் செய்த பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் விருதுநகர் மாவட்டம், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகரில் தனிவட்டாட்சியராக கடந்த 10.07.2023 ஆம் தேதி முதலும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 11.10.2023 ஆம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று 07.11.2023 மாலை சுமார் 17.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், விருதுநகரிலுள்ள தனிவட்டாட்சியர் இரயில்வே இரட்டிப்பு பாதை, அலகு-1 அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவகத்தில் பணிபுரிந்துவரும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ராமன் என்பவர், பணிமாறுதலில் நேற்று (07.11.2023) பிற்பகல் பணிவிடுவிப்பாகி செல்பவர், அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அனுமதி ஆணை வழங்கியதற்கும், வேறு சில ஆணைகள் வழங்கியதற்கும் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளரிடம் அவருக்கு கீழ் பணிபுரியும் அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்கள் மூலம் நன்கொடை என்கிற பெயரில் பணம் வசூல் செய்து கொண்டிருப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை 17.30 மணிக்கு வந்து விபரத்தை கூறி, மேலும் சில தகவலை கேட்டுத்தெரிந்துக்கொண்டேன். அப்போது அலுவலகத்திலிருந்த அப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் மற்றும் அவரது குழுவினருடன் நேற்று (07.11.2023) மாலை சுமார் 18.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு சென்று, விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரே உள்ள மேற்படி விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு அருகே சென்று, சிறிது நேரம் கண்காணித்துவிட்டு, மேற்படி கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறைக்குள் நேற்று (07.11.2023) மாலை சுமார் 18.30 மணிக்கு சென்று, இரவு 22.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது பொறுப்பு நேர்முக உதவியாளராக (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா

என்பவரிடமிருந்த பணம் ரூ.13,000/- அவரால் கணக்கில் காட்டப்படாத பணம் எனவும், நன்கொடை என்கிற பெயரில் அவரால் வசூல் செய்த கையூட்டு பணமாக இருக்கலாம் எனவும் கருதி அப்பணம் ரூ.13,000/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன், பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா மற்றும் அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் ஆகியோர் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று (07.11.2023) மாலை சுமார் 18.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விவரம் பின்வருமாறு; திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் 1) ஆய்வு செய்த இடம் மற்றும் அலுவலகம்: நல்வாழ்வுத்துறை, கல்வி மற்றும் இதர அலுவலகங்கள் கொண்ட கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். 2) ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் 07.11.2023 மாலை சுமார் 18.30 மணியளவில், 3)ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் திரு.S.மகேஷ், (48/2023), த/பெ.ஸ்ரீநிவாசன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (நி.எ), மதுரை -தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர், 4)ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர் திரு.இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். 5) ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த அரசு / பொது அலுவலர்கள் 1) திரு.இராமன், 41/2023, த/பெ.தனபால், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர், 2) திரு.திருசெல்வராஜா, 52/2023, த/பெ.பழனியாண்டி, தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, பட்டம்புதூர். பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி), மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். 3) திரு.சாணக்கியன், 43/2023, த/பெ.முனியாண்டி, இளநிலை உதவியாளர், அ-பிரிவு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், விருதுநகர். 6)ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த தனிநபர்: இல்லை விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரே உள்ள நல்வாழ்வுத்துறை, கல்வி மற்றும் இதர துறை அலுவலகங்கள் கொண்ட கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவகத்தில் பணிபுரிந்துவரும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ராமன் என்பவர், பணிமாறுதலில் இன்று (07.11.2023) பிற்பகல் பணிவிடுவிப்பாகி செல்பவர், அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அனுமதி ஆணை வழங்கியதற்கும், வேறு சில ஆணைகள் வழங்கியதற்கும் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளரிடம் அவருக்கு கீழ் பணிபுரியும் அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்கள் மூலம் நன்கொடை என்கிற பெயரில் பணம் வசூல் செய்து கொண்டிருப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல்

அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 07.11.2023 மாலை சுமார் 18.30 மணியிலிருந்து காலம்-3 மற்றும் 4-ல் கண்ட அலுவலர்கள் சகிதம் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரே உள்ள மேற்படி விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று முதன்மை கல்வி அலுவலர் அறையில் பார்த்தபோது, முதன்மை கல்வி அலுவலர் இருக்கையில் காலம்-5 வரிசை எண்.1-ல் கண்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன் என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு நேரெதிரே இடதுபக்கம் காலம்-5 வரிசை எண்.2-ல் கண்ட பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா என்பவரும், வலதுபக்கம் காலம்-5 வரிசை எண்.3-ல் கண்ட அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் என்பவரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களிடம் விவரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வில் காலம்-5 வரிசை எண். 1-ல் கண்ட திரு.இராமன் என்பவரை சோதனை செய்ய, அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.60/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (07.11.2023) வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு கொண்டுவந்ததாக சொன்னார். ஆகையால் அந்த ரூ.60/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கையையும், அவரது லெதர்பேக்கையும் சோதனை செய்ய, அவரது லெதர்பேக்கில் ஒரு காக்கி நிற கவர் இருந்தது. அந்த காக்கிநிற கவரில் SEAS Remunaration 10,000/- CEO sir, vnr என்று ஆங்கிலத்தில் பச்சைநிற மையினால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவரை திறந்து உள்ளே பார்க்க, அதில் கத்தையாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணம் ஆக மொத்தம் ரூ.10,000/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர், அந்த பணம் 03.11.2023 அன்று விருதுநகர் மாவட்டத்தில் 3ஆம் வகுப்பு, 6ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மாநில அளவிலான அடைவு தேர்வு நடத்தியதற்காக பாலையம்பட்டியிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பொறுப்பு வகிக்கும் திரு.வெள்ளைத்துரை என்பவர் எனக்கு கொடுத்த தொகுப்பூதியம் என்று கூறினார். ஆகையால், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பொறுப்பு வகிக்கும் திரு.வெள்ளைத்துரை அவர்களின் தொலைபேசி எண்.7373003433-க்கு முதன்மை கல்வி அலுவலரின் தொலைபேசியிலிருந்து அவரை தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் முதன்மை கல்வி அலுவலர் கூறியதையே சொன்னார். எனவே அந்த பணம் ரூ.10,000/-மும், காக்கிநிற கவருடன் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரிடம், ஏன் உங்கள்மீது மாவட்டத்திலுள்ள அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அனுமதி ஆணை வழங்கியதற்கும், வேறு சில ஆணைகள் வழங்கியதற்கும் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளரிடம் உங்களுக்கு கீழ் பணிபுரியும் அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக

உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்கள் மூலம் நன்கொடை என்கிற பெயரில் பணம் வசூல் செய்துகொண்டிருப்பதாக தகவல் வந்தது என்று கேட்க, அதற்கு அந்த தகவல் தவறான தகவல் சார் என்றும், வரும் 16.11.2023 முதல் 27.11.2023 வரை 12 நாட்கள் விருதுநகரில் நடக்கவுள்ள புத்தக திருவிழாவை நடத்த செலவு செய்வதற்காக, அரசு உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளர்களிடம் நன்கொடையாக அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்கள் மூலம் பணம் ரூ.3,00,000/- வரை நன்கொடை என்கிற பெயரில் வசூல் செய்தேன் சார் என்றும், அந்த பணத்தையும் அலுவலகத்திற்கு வெளியே வைத்துதான் வசூல் செய்தேன் சார் என்றும், அவ்வாறு நன்கொடையாளர்களிடம் பணம் வசூல் செய்ததைதான் அவ்வாறு தங்களுக்கு தவறாக தகவல் சொல்லியிருக்கிறார்கள் சார் என்றும், தற்போது அந்த பணம் ரூ.3,00,000/-மும் தான் வாடகைக்கு குடியிருக்கும் கூரைக்குண்டு ஊராட்சி மாடன்நகர் கதவு எண்.2/132 என்கிற முகவரியிலுள்ள வீட்டின் முதல் தளத்திலுள்ள வீட்டில் வைத்துள்ளேன் என்றும் கூறினார். ஆகையால் எந்தெந்த நன்கொடையாளர்களிடம் பணம் வசூல் செய்தீர்கள் என்று கேட்க, சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு யார்யாரிடம் வசூல் செய்தேன் என்று தற்போது ஞாபகமில்லை என்றும், அவர்களாக கொடுத்த நன்கொடை பணம்தான், நான் அவர்களிடம் நன்கொடை கேட்கவில்லை என்றும், மாறி மாறி முன்னுக்கு பின் முரணாக சொன்னார். பின்னர் காலம்-5 வரிசை எண். 2-ல் கண்ட திரு.திருசெல்வராஜா என்பவரை சோதனை செய்ய, அவரது இடதுபக்க பேண்ட்பாக்கெட்டில் ரூ.250/-ம், பின்பக்க பேண்ட்பாக்கெட்டில் ரப்பர் பேண்ட் போட்டு சுற்றி 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 26 எண்ணம் ஆக மொத்தம் ரூ.13,000/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த ரூ.250/- பணம் அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (07.11.2023) வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு கொண்டுவந்ததாக சொன்னார். ஆகையால் அந்த ரூ.250/- பணம் மட்டும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சற்று மௌனமாக இருந்துவிட்டு அவர் மேற்படி பணம் ரூ.13,000/- ஆனது, பட்டம்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.அழகிரி என்பவருக்கு கடந்த ஜூன் மாதம் முதல் வருகிற டிசம்பர் மாதம் வரையிலான காலத்திற்குரிய ஊதியம் மொத்தமாக பட்டம்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் பெயரில் உள்ள ஐடிபிஐ வங்கி, விருதுநகர் கிளை சேமிக்கு கணக்கில் (கணக்கு எண்.1118104000129596) ரூ.21,000/- வரவாகியது சார், அதிலிருந்து கடந்த 03.11.2023 அன்று ரூ.15,000/- மட்டும் எடுத்து, நான் செலவு செய்ததுபோக மீதமுள்ள பணம்தான் இந்த ரூ.13,000/- பணம் என்று கூறினார். துப்புரவு பணியாளருக்குரிய ஊதியத்தை 03.11.2023 அன்று வங்கியிலிருந்து எடுத்து, அவரிடம் கொடுக்காமல் ஏன் கையில் வைத்திருந்தீர்கள் என்று கேட்க, அதற்கு அவர், எதுவும் பதில் சொல்லாமல் மீண்டும் மௌனமாக இருந்தார். அ வர் இவ்வாறு மௌனமாக இருப்பது,

முன்னுக்குபின் முரணாக இருந்ததால், அந்த பணம் ரூ.13,000/- அவரால் கணக்கில் காட்டப்படாத பணம் எனவும், நன்கொடை என்கிற பெயரில் வசூல் செய்த கையூட்டு பணமாக இருக்கலாம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் காலம்-5 வரிசை எண்.3-ல் கண்ட திரு.சாணக்கியன் என்பவரை சோதனை செய்ய, அவரது இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.300/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (07.11.2023) வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு கொண்டுவந்ததாக சொன்னார். ஆகையால் அந்த ரூ.300/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம்-5 வரிசை எண்.2 மற்றும் 3-ல் கண்ட நபர்களிடம், மாவட்டத்திலுள்ள அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப ஆணை வழங்கியதற்கும், வேறு சில ஆணைகள் வழங்கியதற்கும் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளரிடம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொன்னதன்பேரில் நீங்கள் நன்கொடை என்கிற பெயரில் பணம் வசூல் செய்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் கொடுத்ததாக தகவல் வந்தது என்று கேட்க, அதற்கு அவர்கள் இருவரும் தனித்தனியே தவறுதான் சார் என்றும், புத்தக திருவிழாவை நடத்துவதற்கு செலவு செய்வதற்காக, அரசு உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளர்களிடம் நன்கொடையாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொன்னதன்பேரில் ரூ.3,00,000/- வரை வசூல் செய்தோம் சார் என்றும், அந்த பணத்தையும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொன்னதன்பேரில் அலுவலகத்திற்கு வெளியே வைத்துதான் வசூல் செய்தோம் சார் என்றும், அவ்வாறு நன்கொடையாளர்களிடம் பணம் வசூல் செய்ததைதான் தவறாக இவ்வாறு தங்களுக்கு தகவல் சொல்லியிருக்கிறார்கள் என்றும், அந்த ரூ.3,00,000/- பணத்தையும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடமே கொடுத்துவிட்டோம் என்றும், அவர் அந்த பணத்தை அவர் வாடகைக்கு குடியிருக்கும் மாடன்நகரில் உள்ள வீட்டில் வைத்துள்ளார் என்றும் கூறினார்கள். ஆகையால் எந்தெந்த நன்கொடையாளர்களிடம் பணம் வசூல் செய்தீர்கள் என்று கேட்க, மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்குத்தான் அது குறிப்பாக தெரியும் சார் என்றும், அவர் சொன்னதன்பேரில்தான் அந்த நன்கொடையாளர்களிடம் பணம் வசூல் செய்தோம் என்றும் கூறிவிட்டு, சற்று நேரம் இருவரும் அமைதியாக இருந்துவிட்டு, தொடர்ந்து அவர்கள் இருவரும் அந்த நன்கொடையாளர்களின் பெயர் விவரம் தங்களுக்கு தற்போது ஞாபகமில்லை என்றும், தெரியாது என்றும் மாறி மாறி முன்னுக்குப்பின் முரணாக கூறினார்கள். இந்த திடீர் இணை ஆய்வு இன்று (07.11.2023) இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன், அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. எனவே நேற்று (07.11.2023) எனது தலைமையில் விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் திடீர் இணை

ஆய்வு சோதனையின்போது, முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் பொறுப்பு நேர்முக உதவியாளராக (உயர்நிலைப்பள்ளி) பணிபுரியும் திரு.திருசெல்வராஜா என்பவரிடமிருந்து ரூ.13,000/- பணம் கணக்கில் காட்டப்படாத பணம் எனவும், நன்கொடை என்கிற பெயரில் அவரால் வசூல் செய்த கையூட்டு பணமாக இருக்கலாம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டதற்கும், விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலராக பணிபுரிந்த திரு.இராமன் என்பவர், மாவட்டத்திலுள்ள அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அனுமதி ஆணை வழங்கியதற்கும், வேறு சில ஆணைகள் வழங்கியதற்கும் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் நிர்வாக பொறுப்பாளரிடம் அவருக்கு கீழ் பணிபுரியும் அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்களை நன்கொடை என்கிற பெயரில் பணம் வசூல் செய்ய சொன்னதற்கும், மேற்படி திரு.சாணக்கியன் மற்றும் திரு.திருசெல்வராஜா ஆகியோர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன் அவர்கள் சொன்னதன்பேரில் நன்கொடை என்கிற பெயரில் ரூ.3,00,000/- வரை பணம் வசூல் செய்து கொடுத்ததற்கும், மேற்படி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன், அ-பிரிவு இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் பொறுப்பு நேர்முக உதவியாளர் (உயர்நிலைப்பள்ளி) திரு.திருசெல்வராஜா ஆகியோர்கள்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், மேற்படி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமன், இளநிலை உதவியாளர் திரு.சாணக்கியன் மற்றும் நேர்முக உதவியாளர் திரு.திருசெல்வராஜா ஆகியோர்களது வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.13,000/- ஆகியவற்றை சமர்ப்பிக்கிறேன். (sd) சீ.மகேஷ் 8/11/23 (S.மகேஷ்) விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். தனி வட்டாட்சியர், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர். Sir, Received a complaint and registered a case in Virudhunagar V&AC Cr.No.10/2023 U/s 7 of PC Act-1988 as amended in 2018 on 08.11.2023 at 04.00 hrs. First Information Report (Original Copy) and complaint are submitted to the Hon'ble CJM cum Spl. Judge, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd) R.Boominathan 08.11.2023 (R.BOOMINATHAN) Insp.of Police V&AC, VNR.

[R. BOOMINATHAN] Insp of Police, V&AC, VNR.